## கடற்கரை கவியரங்கு எண் – 609 நாள் 02-01-2022

# மானுடமே கேளாய்!

ஓடுகின்ற உலகத்தில் எந்நாளும் ஓடும் மானிடரே!
ஓயாமல் பலகதைகள் ஓய்வின்றி சொல்வதேனோ!
ஆடுகின்ற மயிலழகும், அடுத்துவரும் மழைபொழிவும்;
பாடுகின்ற குயிலோசை; படபடக்கும் மரக்கிளைகள்,

வாடாது உலகத்தில் வாழ்வதைத்தான் காண்பாயோ!
தேடாது பொருள்குவிக்க, திரும்பாது பசியோடு!
நாடாது மானுடத்தில் நலமில்லாச் சிந்தையதை!
கூடாது உணவன்றி ஒரு பொருளும் தேடாது!

கொல்லைப்புறம் கூவும்; கோபுரத்தில் தான் உறுமும்!
மல்லைச் சிற்பம்காண் மானிடர்க்கு அகவிடுமே!
தொல்லையில் கானகத்தில் தொடர்ந்து பண்ணிசைக்கும்!
எல்லையில் வாழ்வியலில் எந்நாளும் சலியாது!

தொல்லையாம் இயற்கையென துவண்டு மடியாது!
கல்லைச் சுமக்காது! கள்ளையும் சுவைக்காது!
கள்ளாய் தேனெடுத்து நம்கரத்தில் மடிந்துவிழும்!
பொல்லாப் புனைகதைகள் போற்றிப் புகல்வதில்லை!

பக்குவமாய் வாழ்வியலைப் பார்த்துப் படிப்போமே!
எக்கனமும் சோராது இயைந்து வாழ்வோமே!
திக்கெட்டும் இயற்கையெழில் தெரிந்து கொள்வோமே!
தக்கவராய் மண்ணுலகில் வாழ்ந்து நிறைவோமே!

- **கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**

02-01-2022 (02.15 பி.எம்.)

